JMC, Thiruvadanai-CC No.327/2023
Judgment Dated: 27.07.2026

**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாடானை.**

முன்னிலை : திரு.J.அன்டோனி ரிஷன்தேவ், B.B.A., L.L.B(Hons),
நீதித்துறை நடுவர்,
திருவாடானை

2026 ம் ஆண்டு ஜீலை திங்கள் 27 ம் நாள் வியாழக்கிழமை

**ஆண்டுப்பட்டியல் வழக்கு எண். 327/2023**

CNR No. TNRM17-003236-2023

| | | |
|---|---|---|
| 1. | வரிசை எண். | C.C.No.327/2023 |
| 2. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | ஆர்எஸ்மங்கலம் காவல் நிலையம்<br>குற்ற எண். 231/2022 |
| **1 வது எதிரியின் விபரம்** | | |
| 3. | பெயர் | அந்தோணிசாமி(ராஜா) (A1) |
| 4. | த/பெ. | வேதமுத்து |
| 5. | தொழில் | விவசாயம் |
| 6. | முகவரி | பெரியார்நகர், ஆர்எஸ் மங்கலம்,<br>இராமநாதபுரம் மாவட்டம். |
| 7. | வயது | வயது 51/2022 |
| **2 வது எதிரியின் விபரம்** | | |
| | பெயர் | ஆசிர்வாதம்(A2) |
| | த/பெ. | அந்தோணி |
| | தொழில் | விவசாயம் |
| | முகவரி | பெரியார்நகர், ஆர்எஸ் மங்கலம்,<br>இராமநாதபுரம் மாவட்டம். |
| | வயது | 60/2022 |
| | **3 வது எதிரியின் விபரம்** | |
| | பெயர் | முரளி(எ) சுரேஷ்முரளி அமுதசகாயராணி (A3) |
| | த/பெ. | வேதமுத்து |
| | தொழில் | விவசாயம் |
| | முகவரி | பெரியார்நகர், ஆர்எஸ் மங்கலம்,<br>இராமநாதபுரம் மாவட்டம். |
| | வயது | 47/2022 |
| **4 வது எதிரியின் விபரம்** | | |
| | பெயர் | பால்ராஜ் (A4) |

ANTONY RISHAN DEV
Digitally signed by ANTONY RISHAN DEV
Date: 2026.07.27 17:32:53 +0530

| | | |
|---|---|---|
| | த/பெ. | அந்தோணி |
| | தொழில் | விவசாயம் |
| | முகவரி | பெரியார்நகர், ஆர்எஸ் மங்கலம்,<br>இராமநாதபுரம் மாவட்டம். |
| | வயது | 62/2022 |
| 8. | சம்பவ நாள் | 24.09.2022 ம் தேதி 14.00 மணி |
| 9. | புகார் தேதி | 24.09.2022 ம் தேதி 18.30 மணி |
| 10. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | 1, 2, 3, 4 மாண்புமிகு ராமநாதபுரம் மாவட்ட அமர்வு நீதிமன்ற CRLMP.No. 3278/2022, Date 11.10.2022 உத்தரவின்படி முன்பிணை பெற்றுவிட்டபடியால் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை |
| 11. | எதிரிகள் பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | 1, 2, 3, 4 மாண்புமிகு ராமநாதபுரம் மாவட்ட அமர்வு நீதிமன்ற CRLMP.No. 3278/2022, Date 11.10.2022 உத்தரவின்படி முன்பிணை பெற்று 17.10.2022 ம் தேதி தகுந்த ஜாமின்தாரர்களை நிறுத்தி பிணையில் சென்றுள்ளார்கள். |
| 12. | கமிட்டல் உத்தரவு | இல்லை |
| 13. | விசாரணை துவங்கப்பட்ட நாள் | 10.01.2024 |
| 14. | விசாரணை முடிவுற்ற நாள் | 27.07.2026 |
| 15. | சாட்டப்பட்ட குற்றச்சாட்டு | 1,2,3,4 எதிரிகள் மீது 341,294(b), 506(ii),435 IPC கீழ் |
| | வனையப்பட்ட குற்றச்சாட்டு | 1,2,3,4 எதிரிகள் மீது 341,294(b), 506(ii),435 IPC கீழ் |
| 16. | காலதாமதத்திற்கான காரணம் | –இல்லை– |
| 17. | அரசு தரப்பு சாட்சிகள் | |

| | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
|---|---|---|
| அ.சா.1 | 17.04.2024 | 14.05.2024 |
| அ.சா.2 | 14.05.2024 | 14.05.2024 |
| அ.சா.3 | 14.05.2024 | 14.05.2024 |
| அ.சா.4 | 16.10.2025 | 16.10.2025 |
| அ.சா.5 | 16.10.2025 | 16.10.2025 |
| அ.சா.6 | 16.10.2025 | 16.10.2025 |
| அ.சா.7 | 16.10.2025 | 16.10.2025 |
| அ.சா.8 | 21.07.2026 | 21.07.2026 |

ANTONY RISHAN DEV Digitally signed by ANTONY RISHAN DEV Date: 2026.07.27 17:32:57 +0530

| | | |
|---|---|---|
| 18. | எதிரிகளிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் படி விசாரணை செய்யப்பட்ட நாள் | 27.07.2026 |
| 19. | எதிரிகள் தரப்பு சாட்சிகள் | இல்லை |
| 20. | எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கு.வி.மு.ச.311 பிரிவின்படியான மனுக்கள் | எதிரிகள் தரப்பில் 311 கு.வி.மு.ச.வின் படி மனு தாக்கல் செய்யப்பட்டு Crl.M.P.No.2071/2024 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டு அ.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு 14.05.2024ம் தேதி குறுக்கு விசாரணை செய்யப்பட்டார். |
| 21. | அரசு தரப்பு வழக்கறிஞர் | செல்வி. முத்துமாரி |
| 22. | எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் | திரு.S.B.கண்ணன் |
| 23. | எதிரிகளின் கூற்று | 1,2.3,4 எதிரிகள் குற்றத்தை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார்கள். |
| 24. | தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட நாள் | 27.07.2026 |
| 25. | வழக்கின் முடிவு குறித்து எதிரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | 27.07.2026 |
| 26. | நீதிபதியின் முடிவு | முடிவாக, 1,2,3,4 எதிரிகள் பிரிவுகள் 341, 294(b),506(ii), 435 IPC கீழ் குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து, மேற்படி பிரிவுகளிலிருந்து 1, 2, 3, 4 எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. 1 முதல் 4 எதிரிகள் எழுதிக் கொடுத்த பிணையமுறி ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.<br><br>இவ்வழக்கில் சொத்துக்கள் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை. |

இவ்வழக்கு 24.07.2025ம் தேதி இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு, இந்நீதிமன்றத்தின் முன்பு 27.07.2026ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது, , அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை–1 அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 4 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.B.கண்ணன் அவர்கள் ஆஜராகியும். இருதரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**<u>தீர்ப்புரை</u>**

1. <u>அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையின் சுருக்கம்:–</u>

ANTONY RISHAN DEV
Digitally signed by ANTONY RISHAN DEV
Date: 2026.07.27 17:33:03 +0530

இவ்வழக்கின் புகார்தாரர் பிரபாகரன் என்பவர் தனது ஊரைச் சேர்ந்த வேதமுத்துமகள் சுரேஷ்முரளி அமுதசகாயராணி என்பவரை காதலித்து பெரியோர்கள் சம்மதத்துடன் 2002ம் ஆண்டு திருமணம் செய்து பெரியார் நகரிலேயே தனிக்குடித்தனமாக வாழ்ந்து வந்துள்ளார்கள். அவர்களுக்கு குழந்தை பிறக்காததால் குடும்பத்தில் பிரச்சனை ஏற்பட்டு மனவருத்தம் காரணமாக பிரிந்து புகார்தாரர் தனது மனைவி சுரேஷ்முரளி அமுதசகாயராணி முறையாக நீதிமன்றம் மூலம் விவாகரத்து பெற்றுள்ளார்.அதன்பின்னர் தற்போது சம்பவத்திற்கு சுமார் ஒரு மாதத்திற்கு முன்பு வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்து தனியாக வாழ்ந்து வருகிறார். இந்நிலையில் 24.09.2022ம் தேதி புகார்தாரர் ரெத்தினா மகாலில் பெயிண்ட் வேலை செய்து விட்டு மதியம் 14.00மணியளவில் சொந்த ஊரான பெரியார்நகர் சென்று புகார்தாரர் தனது வீட்டின் வேலைக்கு உரிய பெயிண்ட் சாமான்களை எடுத்துகொண்டு தனது இருசக்கரவாகனம் TN 65 AD 5330 என்ற எண்ணுள்ள Hero Splendor plus ல் வரும்போது பெரியார்நகர் சர்ச் அருகில் இவ்வழக்கின் 1 முதல் 4 எதிரிகள் ஒன்று சேர்ந்து புகார்தாரர் வேறு பெண்ணை திருமணம் செய்து கொண்டதை மனதில் வைத்துகொண்டு புகார்தாரரை வழிமறித்து டேய் தேவிடியா கண்டார ஒழி புண்டாமகனே நில்லுடா உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என்று சொல்லி அருவா கம்புகளுடன் வெட்ட ஓடி வந்துள்ளார்கள். புகார்தாரர் பயந்து தனது இருசக்கரவாகனத்தில் இருந்து கீழே விழுந்து விட்டபோது புகார்தாரர் உயிருக்கு பயந்துகொண்டு இருசக்கரவாகனத்தை அங்கேயே போட்டுவிட்டு தப்பி ஓடிய போது அவர்கள் அனைவரும் சேர்ந்து புகார்தாரரின் இருசக்கரவாகனத்தை கொழுத்திவிடுவோம் என்று சொல்லிக்கொண்டே அருகில் கிடந்த வைக்கோலை அனைவரும் சேர்ந்து அள்ளிப்போட்டு மேற்படி இருசக்கரவாகனத்தை தீ வைத்து கொழுத்தியுள்ளார்கள். அதன் காரணமாக வாகனம் முழுவதும் தீயில் கருகி ரூ.39,000/- சேதத்தை ஏற்படுத்தியும் அப்பாது அதை பார்த்த சாட்சிகள் ஓடி வந்துகேட்டபோது மேற்படி நபர்கள் அவர்களையும் மிரட்டி விட்டுசென்று குற்றம் புரிந்ததாக 1,2,3,4 எதிரிகள் மீது 341,294(b), 506(ii),435 IPC கீழ் ஆர்எஸ் மங்கலம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

2. 1,2,3,4 எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானபோது, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் 1,2,3,4 எதிரிகளுக்கு

ANTONY RISHAN DEV Digitally signed by ANTONY RISHAN DEV Date: 2026.07.27 17:33:09 +0530

கு.வி.மு.ச பிரிவு 207 ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

3. 1 முதல் 4 எதிரிகளுக்கு போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்டு இருதரப்பும் கேட்கப்பட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்ததில், 1 முதல் 4 எதிரிகள் முதல் நோக்கில் குற்றத்தினை செய்திருக்கலாம் என அனுமானிக்க போதிய காரணங்கள் இருந்ததால் 1 முதல் 4 எதிரிகள் மீது பிரிவுகள் 341,294(b),506(ii),435 IPC கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து, படித்துக்காட்டி, விளக்கிக்கூறி வினவிய போது 1 முதல் 4 எதிரிகள் குற்றசாட்டுகளை மறுத்தார்கள். எனவே, அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, அரசு தரப்பு சாட்சியமும், அரசு தரப்பு வழக்கறிஞரால் முடித்து வைக்கப்பட்டது.

5. <u>அரசு தரப்பு வழக்கு மற்றும் சாட்சிய சுருக்கம் பின்வருமாறு : –</u>

இவ்வழக்கின் புகார்தாரர் பிரபாகரன் என்பவர் தனது ஊரைச் சேர்ந்த வேதமுத்துமகள் சுரேஷ்முரளி அமுதசகாயராணி என்பவரை காதலித்து பெரியோர்கள் சம்மதத்துடன் 2002ம் ஆண்டு திருமணம் செய்து பெரியார் நகரிலேயே தனிக்குடித்தனமாக வாழ்ந்து வந்துள்ளார்கள். அவர்களுக்கு குழந்தை பிறக்காததால் குடும்பத்தில் பிரச்சனை ஏற்பட்டு மனவருத்தம் காரணமாக பிரிந்து புகார்தாரர் தனது மனைவி சுரேஷ்முரளி அமுதசகாயராணி முறையாக நீதிமன்றம் மூலம் விவாகரத்து பெற்றுள்ளார்.அதன்பின்னர் தற்போது சம்பவத்திற்கு சுமார் ஒரு மாதத்திற்கு முன்பு வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்து தனியாக வாழ்ந்து வருகிறார். இந்நிலையில் 24.09.2022ம் தேதி புகார்தாரர் ரெத்தினா மகாலில் பெயிண்ட் வேலை செய்து விட்டு மதியம் 14.00மணியளவில் சொந்த ஊரான பெரியார்நகர் சென்று புகார்தாரர் தனது வீட்டின் வேலைக்கு உரிய பெயிண்ட் சாமான்களை எடுத்துகொண்டு தனது இருசக்கரவாகனம் TN 65 AD 5330 என்ற எண்ணுள்ள Hero Splendor plus ல் வரும்போது பெரியார்நகர் சர்ச் அருகில் இவ்வழக்கின் 1முதல் 4 எதிரிகள் ஒன்று சேர்ந்து புகார்தாரர் வேறு பெண்ணை திருமணம் செய்து கொண்டதை மனதில் வைத்துகொண்டு புகார்தாரரை வழிமறித்து டேய் தேவிடியா கண்டார ஒழி புண்டாமகனே நில்லுடா உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என்று சொல்லி அருவா கம்புகளுடன் வெட்ட ஓடி வந்துள்ளார்கள். புகார்தாரர் பயந்து தனது இருசக்கரவாகனத்தில் இருந்து கீழே

ANTONY RISHAN DEV
Digitally signed by ANTONY RISHAN DEV
Date: 2026.07.27 17:33:14 +0530

விழுந்து விட்டபோது புகார்தாரர் உயிருக்கு பயந்துகொண்டு இருசக்கரவாகனத்தை அங்கேயே போட்டுவிட்டு தப்பி ஓடிய போது அவர்கள் அனைவரும் சேர்ந்து புகார்தாரரின் இருசக்கரவாகனத்தை கொழுத்திவிடுவோம் என்று சொல்லிக்கொண்டே அருகில் கிடந்த வைக்கோலை அனைவரும் சேர்ந்து அள்ளிப்போட்டு மேற்படி இருசக்கரவாகனத்தை தீ வைத்து கொழுத்தியுள்ளார்கள். அதன் காரணமாக வாகனம் முழுவதும் தீயில் கருகி ரூ.39,000/- சேதத்தை ஏற்படுத்தியும் அப்பாது அதை பார்த்த சாட்சிகள் ஓடி வந்துகேட்டபோது மேற்படி நபர்கள் அவர்களையும் மிரட்டி விட்டுசென்று குற்றம் புரிந்துள்ளார்கள் என்பதேயாகும். மேற்படி சம்பவத்தை அ.சா.2 சேகர், அ.சா.3 அருள்சாமி, அ.சா.4.ஜோசப்மாரி, மற்றும் சாட்சி ஜெயமேரி ஆகியோர்கள் பார்த்தார்கள்.

5(2) அ.சா.1 தனது சாட்சியத்தில் கடந்த 24.09.2022ம் தேதி தான் பெரியார் நகரில் உள்ள தனது வீட்டில் வந்து சாமான்களை எடுத்துவிட்டு திரும்ப தனது இருசக்கரவாகனத்தில் சர்ச் பக்கம் சென்று கொண்டிருந்தபோது எதிரிகள் தன்னை வழிமறித்து தாக்கியதாகவும் அதில் தனக்கு விரலில் லேசான காயம் ஏற்பட்டதாகவும் பின் தனது இருசக்கரவாகனத்தை அவ்விடத்திலேயே போட்டுவிட்டு தான் ஓடிவிட்டதாகவும் பின்னர் தனது வீட்டிற்கு வந்து தனது தாயார் போனில் இருந்து அவசர போலிசுக்கு போன் செய்ததாகவும் அதற்குள் எதிரிகள் தனது இருசக்கரவாகனத்தை எறிந்துவிட்டார்கள் என்றும் போலிசார் சம்பவயிடத்திற்கு வந்து விசாரித்தார்கள் என்றும் அதன்பின் காவல் நிலையம் சென்று அ.சா,ஆ.1 புகார்மனு அளித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

5(3) அ.சா.2 தனது சாட்சியத்தில் 24.09.2022ம் தேதி மதியம் 02.00மணியளவில் தான் வயலில் ஆடுமேய்த்து கொண்டிருந்தபோது எதிரிகள் அ.சா.1யை அருவாளை கொண்டு துரத்தியதை தான் பார்த்ததாகவும் அ.சா.1 பயந்து ஓடி கொண்டிருந்ததாகவும் எதிரிகள் அ.சா.1ன் இருசக்கரவாகனத்தை கொளுத்தி எறிந்து கொண்டிருந்ததை தான் பார்த்ததாகவும் சம்பவத்தில் அ.சா.1க்கு கையில் காயம் ஏற்பட்டதை அ.சா.1 தன்னிடம் காண்பித்ததாகவும் சம்பவம் தொடர்பாக அ.சா.1காவல் நிலையத்தில் புகார் அளித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

ANTONY RISHAN DEV
Digitally signed by ANTONY RISHAN DEV
Date: 2026.07.27 17:33:19 +0530

5(4) அ.சா.3 தனது சாட்சியத்தில் அ.சா.1 தனது மகன் என்றும் கடந்த 24.09.2022 ம் தேதி தான் ஆர்.எஸ்.மங்கலம் சென்று விட்டு வீட்டிற்கு வந்தபோது அ.சா.1 ன் இரசக்கரவாகனம் எறிந்து கொண்டிருந்ததாகவும் அப்போது அவ்விடத்தில் போலிசார் இருந்ததாகவும் தான் வீட்டிற்க்கு சென்றுவிட்டு திரும்பி வந்து பார்த்தபோது எதிரிகள் அருவாளை கொண்டு அ.,சா.1 யை மிரட்டி கொண்டிருந்ததாகவும் அ.சா.1 சம்பவம் தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் அளித்த விவரம் தனக்கு தெரியும் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

5(5) அ.சா.4 தனது சாட்சியத்தில் அ.சா.1 தனது மகன் என்றும் சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஆவணி மாதம் அ.சா.1 பெயிண்ட் அடிப்பதற்காக இருசக்கரவாகனத்தில் வீட்டிற்கு வந்தபோது எதிரிகள் அருவாள் கொண்டு அ.சா.1 யை விரட்டி வந்ததாகவும் உடனே அ.சா.1 வண்டியை நிறுத்திவிட்டு ஓடி வந்ததாகவும் அதன்பின் எதிரிகள் வைக்கோல் வைத்து அ.சா.1 ன் இருசக்கர வாகனத்தை எறித்ததாகவும் அ.சா.1 சம்பவம் தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் அளித்த விவரம் தனக்கு தெரியும் என சாட்சியம் அளித்துள்ளார்

5(6) அ.சா.5 தனது சாட்சியத்தில் கடந்த 24.09.2022 ம் தேதி மதியம் 02.00 மணியளவில் அசா.4 தனக்கு போன்செய்து எதிரிகள் அ.சா.1 ன் இருசக்கரவாகனத்தை எறித்துவிட்டதாகவும் தான் உடனே புறப்பட்டு சம்பவயிடத்திற்கு சென்று பார்த்தபோது அங்கு போலிசார் வந்து எதிரிகளை அழைத்து பேசிவிட்டு அனுப்பி வைத்ததாக சாட்சியமளித்துள்ளார்.

5(7) அ.சா.6 தனது சாட்சியத்தில் கடந்த 24.09.2022 ம் தேதி மாலை 4 மணியளவில் தான் ஆர்.எஸ்.மங்கலம் பெரியார் நகருக்கு எதார்த்தமாக சென்றபோது அங்கு ஆர். எஸ் மங்கலம் போலிசார் எறிந்த நிலையில் கிடந்த ஒரு இருசக்கரவாகனத்தை புகைப்படம் எடுத்து கொண்டிருந்ததாகவும் அதற்கு சாட்சியாக தன்னிடம் ஒரு ஆவணத்தில் அங்கு வைத்து கையொப்பம் வாங்கியதாகவும் மற்றொரு ஆவணத்தில் தன்னிடம் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் வாங்கியதாகவும் அத்தாட்சியில் உள்ள ,அ.சா.ஆ,2 முதலாவது கையொப்பமும், பார்வைமகசரில் உள்ள அ.சா.ஆ.3 முதலாவது கையொப்பமும் தன்னுடையது தான் என்று சாட்சியம் அளித்துள்ளார்

ANTONY RISHAN DEV
Digitally signed by ANTONY RISHAN DEV
Date: 2026.07.27 17:33:24 +0530

5(8) அ.சா.7 தனது சாட்சியத்தில் 26..09.2022ம் தேதி மாலை 5 மணியளவில் தான் ஆர்எஸ்.மங்கலம் பெரியார் நகருக்கு சென்றிருந்த போது போலிசார் எறிந்து நின்ற ஒரு இருசக்கரவாகனத்தை புகைப்படம் எடுத்து விசாரணை செய்து கொண்டிருந்தார்கள் என்றும் அதற்கு சாட்சியாக தன்னிடம் இரண்டு ஆவணங்களில் கையொப்பம் பெற்றார்கள் என்றும் அத்தாட்சியில் உள்ள அ.சா.ஆ,4 இரண்டாவது கையொப்பமும், பார்வைமகசரில் உள்ள அ.சா,ஆ.5 இரண்டாவது கையொப்பமும் தன்னுடையது தான் என சாட்சியம் அளித்துள்ளார்

5(9) அ.சா.8 தனது சாட்சியத்தில் கடந்த 2022ம் வருடம் ஆர்.எஸ்.மங்கல காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றியபோது கடந்த 26.09.2022 ம் தேதி 15.00 மணியளவில் இவ்வழக்கில் புகார்தாரர் பிரபாகரன் என்பவர் கொடுத்த புகார் மனுவை நிலைய பொறுப்பில் இருந்த சிறப்பு சார்பு ஆய்வாளர் பாலுசாமி என்பவர் பதிவுசெய்து வைத்திருந்த மனு ரசீது எண் 273/22 என்ற எண்ணுடைய புகாருடன் கூடிய மனுரசீதினை தனது விசாரணைக்கு எடுத்துகொண்டு புகார் மனுவின் தன்மைக்கேற்ப நிலையை குற்றஎண். 231/22 u/s 341,294(b),506(ii),435 IPC வழக்கு பதிவு செய்து அ.சா.ஆ.6 முதல்தகவல்அறிக்கை பதிவு செய்துள்ளார்.

5(10) பின்னர் வழக்கு கோப்பினை தனது விசாரணைக்கு எடுத்து கொண்டு அதே நாள் 17.00 மணியளவில் சம்பவயிடம் சென்று சாட்சிகள் சத்தியமூர்த்தி, சுரேஷ் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.7 பார்வைமகசர் அ.சா.ஆ.8 மாதிரிவரைபடம் தயார் செய்தேன் என்றும் சம்பவயிடத்திலிருந்து எறிந்து சேதப்பட்ட நிலையில் இருந்து TN 65 A 5330 என்ற எள்ணுள்ள இருசக்கரவாகனத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் அ.சா.ஆ.9 அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினேன் என்றும் பின்னர் வழக்கின் சாட்சிகளான பிரபாகரன், ஜெயமேரி,சேகர், அருள்சாமி, ஜோசப்மேரி, அந்தோணிசாமி, சத்தியமூர்த்தி மற்றும் சுரேஷ் ஆகியோர்களை தனிதனியே விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவுசெய்துள்ளார்.

5(11) அவர்கள் விசாரணையிலும் சாட்சிகளை விசாரணை செய்ததிலும் குற்றசம்பவம் உண்மையனெ தெரியவந்து வழக்கில் ஈடுபட்ட எதிரிகளை தேடிவந்த நிலையில் இவ்வழக்கின் எதிரிகள் அனைவரும் ராமநாதபுரம் மாவட்டஅமர்வு நீதிமன்ற முன்பிணையில் சென்றதாக தெரியவந்தது என்றும் பின்னர் இவ்வழக்கில்

ANTONY RISHAN DEV Digitally signed by ANTONY RISHAN DEV Date: 2026.07.27 17:33:29 +0530

சேதப்படுத்தப்பட்ட இருசக்கரவாகனத்தினை அளவீடு செய்து சேத மதிப்பு சான்றிதழ் வழங்கிய அருண் பாண்டி என்பவரை விசாரணை செய்து அ.சா.ஆ.10 சேதமதிப்பு சான்று மற்றும் அவரது வாக்குமூலம் பதிவுசெய்து கொண்டேன் என்றும் இவ்வழக்கில் சேதப்படுத்தப்படட இருசக்கரவாகனம் எறிந்துவிட்டதால் சம்பவயிடத்திலேயே அ.சா.ஆ.11 இருசக்கரவாகனத்தின் புகைப்படம் எடுத்தேன் என்றும் பின்னர் தனது விசாரணையை முடித்து கொண்டு எதிரிகள் மீது 341,294(b),506(ii),435 இதச கீழ் ஆர்.எஸ்.மங்கல காவல்நிலைய சார்பு ஆய்வாளர் குற்ற இறுதியறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

6. அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களில் இருந்து 1 முதல் 4 எதிரிகளுக்கு பாதமகமாக உள்ள சங்கதிகள் குறித்து 1 முதல் 4 எதிரிகளிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)ன் கீழ் படித்துக் காட்டி விளக்கிக்கூறி வினவிய போது 1 முதல் 4 எதிரிகள் அரசு தரப்பு சாட்சிகள் சொல்வது பொய்யென்றும், அரசு தரப்பு வழக்கு பொய் வழக்கென்றும் 1 முதல் 4 எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என தெரிவிக்கப்பட்டது. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது.

7. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் 1 முதல் 4 எதிரிகள் மீது பிரிவுகள் 341, 294(b), 506(ii), 435 கீழ், சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும் ?

**தீர்வு**

8. இவ்வழக்கின் புகார்தாரர் பிரபாகரன் என்பவர் தனது ஊரைச் சேர்ந்த வேதமுத்துமகள் சுரேஷ்முரளி அமுதசகாயராணி என்பவரை காதலித்து பெரியோர்கள் சம்மதத்துடன் 2002 ம் ஆண்டு திருமணம் செய்து பெரியார்நகரிலேயே தனிக்குடித்தனமாக வாழ்ந்து வந்துள்ளார்கள். அவர்களுக்கு குழந்தை பிறக்காததால் குடும்பத்தில் பிரச்சனை ஏற்பட்டு மனவருத்தம் காரணமாக பிரிந்து புகார்தாரர் தனது மனைவி சுரேஷ்முரளி அமுதசகாயராணி முறையாக நீதிமன்றம் மூலம் விவாகரத்து பெற்றுள்ளார். அதன்பின்னர் தற்போது சம்பவத்திற்கு சுமார் ஒரு மாதத்திற்கு முன்பு வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்து தனியாக வாழ்ந்து வருகிறார். இந்நிலையில் 24.09.2022 ம் தேதி புகார்தாரர் ரெத்தினா மகாலில் பெயிண்ட் வேலை செய்து விட்டு மதியம் 14.00 மணியளவில் சொந்த ஊரான பெரியார்நகர் சென்று புகார்தாரர் தனது

ANTONY RISHAN DEV Digitally signed by ANTONY RISHAN DEV Date: 2026.07.27 17:33:35 +0530

வீட்டின் வேலைக்கு உரிய பெயிண்ட் சாமான்களை எடுத்துகொண்டு தனது இருசக்கரவாகனம் TN 65 AD 5330 என்ற எண்ணுள்ள Hero Splendor plus ல் வரும்போது பெரியார்நகர் சர்ச் அருகில் இவ்வழக்கின் 1 முதல் 4 எதிரிகள் ஒன்று சேர்ந்து புகார்தாரர் வேறு பெண்ணை திருமணம் செய்து கொண்டதை மனதில் வைத்துகொண்டு புகார்தாரரை வழிமறித்து டேய் தேவிடியா கண்டார ஒழி புண்டாமகனே நில்லுடா உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என்று சொல்லி அருவா கம்புகளுடன் வெட்ட ஓடி வந்துள்ளார்கள். புகார்தாரர் பயந்து தனது இருசக்கரவாகனத்தில் இருந்து கீழே விழுந்து விட்டபோது புகார்தாரர் உயிருக்கு பயந்துகொண்டு இருசக்கரவாகனத்தை அங்கேயே போட்டுவிட்டு தப்பி ஓடிய போது அவர்கள் அனைவரும் சேர்ந்து புகார்தாரரின் இருசக்கரவாகனத்தை கொழுத்திவிடுவோம் என்று சொல்லிக்கொண்டே அருகில் கிடந்த வைக்கோலை அனைவரும் சேர்ந்து அள்ளிப்போட்டு மேற்படி இருசக்கரவாகனத்தை தீ வைத்து கொழுத்தியுள்ளார்கள். அதன் காரணமாக வாகனம் முழுவதும் தீயில் கருகி ரூ.39,000/- சேதத்தை ஏற்படுத்தியும் அப்பாது அதை பார்த்த சாட்சிகள் ஓடி வந்துகேட்டபோது மேற்படி நபர்கள் அவர்களையும் மிரட்டி விட்டுசென்று குற்றம் புரிந்ததாக 1 முதல் 4 எதிரிகள் மீது 341, 294(b), 506(ii), 435 கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களானது சந்தேகமற நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து அரசு தரப்பு சாட்சிய சான்றாவணங்களை நன்கு கூர்ந்து கவனமாக பரிசீலிக்கப்பட்டது.

9. அரசு தரப்பில் ஆஜரான கற்றறிந்த அரசு குற்றத்துறை வழக்கறிஞர் தனது வாதுரையில் வழக்கின் புகார்மனுவை ஒத்துரைத்து, வழக்கின் புகார்தாரரான அ.சா.1, மற்றும் கண்ணுற்ற சாட்சிகளான அ.சா,2, அ.சா.3, அ.சா.4, செவி வழி கேட்டறிந்த சாட்சியான அ,சா.5 மற்றும் பார்வைமகசர், அத்தாட்சி சாட்சிகளான அ.சா.6, அ.சா.7 ஆகியோர்கள் சாட்சியம் அளித்திருப்பதாகவும், அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் எதிரிகளின் குற்றச் செயல்களை இணைக்கக்கூடிய வகையில் இருப்பதாகவும், இவ்வழக்கு முறையாக புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும், எனவே,1 முதல் 4 எதிரிகள் பிரிவுகள் 341, 294(b), 506(ii), 435 கீழ் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என வாதிட்டார்.

10. 1,2,3,4 எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில்,

ANTONY RISHAN DEV Digitally signed by ANTONY RISHAN DEV Date: 2026.07.27 17:33:40 +0530

அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகள் ஒருவருக் கொருவர் முரண்பட்டு சாட்சியம் அளித்திருப்பதாகவும், புகார்தாரருக்கும் எதிரிகளுக்கும் ஏற்கனவே உள்ள முன்விரோதத்தை மனதில் வைத்து கொண்டு புகார்தாரர் பொய் புகார் அளித்திருப்பதாகவும் புலன்விசாரணை அதிகாரியால் இவ்வழக்கு முறையாக புலன்விசாரணை மேற்கொள்ளப் படவில்லை என்றும், எனவே, 1,2,3,4 எதிரிகளை மேற்படி குற்றவினைக்கு உள்ளாக்குவது நீதியின் நலனுக்கு உகந்தது அல்ல என வாதிட்டார்.

11. இவ்வழக்கில் புகார்தாரர் புகார்மனுவில் தனக்கும் தனது முன்னாள் மனைவியான 3ம் எதிரி குடும்பத்திற்கும் தான் 3ம் எதிரியை விவாகரத்து செய்து கொண்டு மறுமணம் செய்துகொண்டது சம்மந்தமாக முன்விரோதம் இருப்பதாக தெரிவித்துள்ள நிலையில் " enmity is a double edged sword. It can be a ground for false implication. It also can be a ground for assault" என்ற நியமத்தின் படி புகார்தாரர் மற்றும் அவரது பெற்றோர்களான அ.சா.3, அ.சா.4 மற்றும் அவரது உறவினர்களான அ.சா.2, அ.சா.5 ஆகியோரின் சாட்சியங்களை கவனமாக பரிசீலிக்கும் கடமை இந்நீதிமன்றத்திற்கு உள்ளது.

12.அ.சா.1 தனது புகார் மனுவில் எதிரிகள் தன்னை வழிமறித்து தாக்க ஓடி வந்தபோது தான் தனது இருசக்கரவாகனத்திலிருந்து கீழே விழுந்து உயிருக்கு பயந்து தனது வாகனத்தை போட்டு விட்டு தப்பி ஓடியதாக தெரிவித்துள்ள நிலையில் தனது முதல்விசாரணை சாட்சியத்தில் எதிரிகள் தன்னை வழிமறித்து அருவாள், கம்பை கொண்டு தன்னை தாக்கியதாகவும் அதில் தனக்கு லேசாக காயம் ஏற்பட்டது என்றும் புகார்மனுவில் தெரிவிக்காத சங்கதிகளை சாட்சியமாக அளித்துள்ளார். புகார்மனுவை தானே எழுதி காவல் நிலையத்தில் கொடுத்ததாக தனது முதல்விசாரணையில் சொல்லியுள்ள நிலையில் புகார்மனுவில் இடம்பெறாத சங்கதிகளை முதல் விசாரணையில் சாட்சியமாக புகார்தாரர் அளித்திருப்பது வழக்கு சம்பவத்தை மிகைப்படுத்தி சாட்சியம் அளித்துள்ளாரா என்னும் சந்தேகத்தினை நீதிமன்றத்திற்கு ஏற்படுத்துகிறது.

13.மேலும், அ.சா.1 தனது முதல்விசாரணையில் சம்பவத்தின்போது தனது தாயாரின் போனில் இருந்து அவசர போலிசுக்கு தான் போன் செய்ததாகவும் போலிசார் சம்பவயிடத்திற்கு வந்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், சம்பவத்தை

ANTONY RISHAN DEV Digitally signed by ANTONY RISHAN DEV Date: 2026.07.27 17:33:45 +0530

கண்ணுற்ற சாட்சி என அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா.1ன் தகப்பனாரான அ.சா.3ம் தனது முதல்விசாரணையில் சம்பவயிடத்திற்கு தான் சென்று பார்த்த போது போலிசார் இருந்தார்கள் என்றும் மேலும் சம்பவத்தை கேள்விபட்டு சம்பவயிடத்திற்கு சென்று பார்த்ததாக சொல்லப்படும் அ.சா.1ன் உறவினரான அ.சா.5 தான் சம்பவயிடம் சென்று பார்த்த போது அங்கு போலிசார் இருந்ததாக தனது முதல்விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் வழக்கின் விசாரணை அதிகாரியான அசா.8 சம்பவத்தன்று காவல்நிலையத்திற்கு அலைபேசி மூலமாக எந்த தகவலும் வரவில்லை என்றும் அதன்பேரில் காவலர்கள் சம்பவத்தன்று சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றும் தனது குறுக்கு விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளார். புகார்தாரர் மற்றும் கண்ணுற்ற சாட்சியான அ.சா.3, செவி வழி கேட்டறிந்த சாட்சியான அ.சா.5 ஆகியோர் சம்பவ சமயத்தில் போலிசார் சம்பவயிடத்திற்கு வந்ததாக சாட்சியம் அளித்துள்ள நிலையில் வழக்கின் விசாரணை அதிகாரி போலிசார் சம்பவத்தன்று சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்று சாட்சியம் அளித்திருப்பது வழக்கு சம்பவத்திற்கு பிந்தைய நிகழ்வுகளை குறித்து அரசுதரப்பு சாட்சியங்கள் ஒருவருக்கொருவர் முரண்பட்டு சாட்சியம் அளித்திருப்பதால் அது அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாக அமைந்துள்ளது.

14.கூடுதலாக அ.சா.3 தனது குறுக்கு விசாரணையில் சம்பவத்தன்று மதியம் 02.15 மணியளவில் தான் போலிசாருக்கு போன் செய்து தெரிவித்ததாகவும் அதன்பேரில் 10 நிமிடத்தில் இரண்டு போலிசார் சம்பவயிடத்திற்கு வந்துவிட்டதாகவும் ஒரு காவலர் பெயர் பாலுசாமி என்றும் அப்போது எதிரிகளும் சம்பவயிடத்தில் இருந்ததாகவும் தனது குறுக்கு விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளார். இந்நிலையில், உண்மையாகவே போலிசார் சம்பவசமயத்தில் சம்பவயிடத்திற்கு வந்திருந்தால் அவர்களை ஏன் இவ்வழக்கில் விசாரிக்கபட்டு சாட்சிகளாக சேர்க்கப்படவில்லை என்பது இவ்வழக்கின் புலன் விசாரணை முறையாக மேற்கொள்ளப்பட்டதா என்னும் சந்தேகத்தினை இந்நீதிமன்றத்திற்கு ஏற்படுத்துகிறது.

15.இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சி என முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா.1ன் தகப்பனாரான அ.சா.3 தான் சம்பவத்தன்று வெளியே சென்றுவிட்டு வீட்டிற்கு வந்து பார்த்தபோது தனது மகனின் இருசக்கரவாகனம் எறிந்து கொண்டிருந்ததாகவும் போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் தனது முதல் விசாரணையில் சாட்சியம்

ANTONY RISHAN DEV Digitally signed by ANTONY RISHAN DEV Date: 2026.07.27 17:33:50 +0530

அளித்திருப்பதால் அவரது சாட்சியம் அரசு தரப்பு வழக்கிற்கு எவ்வகையிலும் உதவக்கூடியதாக அமையவில்லை.

16.மேலும், சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி மற்றும் அ.சா,1ன் தாயாரான அ.சா.4 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் சம்பவ சமயத்தில் சம்பவத்தை குறித்து போலிசாரிடம் தனது போன் மூலம் தான் தகவல் சொன்னதாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில் போலிசாருக்கு போன் மூலம் சம்பவ சமயத்தில் தான் தகவல் தெரிவித்ததாக சாட்சியம் அளித்துள்ள நிலையில் அதற்கு முற்றிலும் மாறாக தான் போலிசாருக்கு போன் மூலம் தகவல் தெரிவித்ததாக அ.சா.4 சாட்சியம் அளித்துள்ளது உண்மையாகவே அ.சா.1 தான் தெரிவித்தது போல் சம்பவசமயத்தில் போலிசாருக்கு போன்மூலம் தகவல் சொல்லி அதன்பேரில் போலிசார் சம்பவத்தன்று சம்பவயிடத்திற்கு வந்து விசாரித்தார்களா என்னும் சந்தேகத்தினை இந்நீதிமன்றத்திற்கு ஏற்படுத்துகிறது.

17. மேலும், முதல்தகவல் அறிக்கை பதிவுசெய்த பின் 26.09.2022ம் தேதி சம்பவயிடம் சென்று எறிந்து கிடந்த இருசக்கர வாகனத்தை புகைப்படம் எடுத்து விசாரணைசெய்து பார்வைமகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்ததாக சொல்லப்படும் நிலையில் 26.09.2022ம் தேதி போலிசாரால் எடுக்கப்பட்டதாக சொல்லப்படும் அ.சா.ஆ.11 புகைப்படத்தை பார்க்கையில் அதில் புகைப்படமானது அதில் உள்ள இருசக்கரவாகனம் தீ அணையாமல் எறிந்து கொண்டிருப்பது போல் இருப்பதாக தெரியவருகிறது. சம்பவத்திற்கு சம்பவம் நடைபெற்ற தினத்திலிருந்து இரண்டு நாட்கள் கழித்து எடுக்கப்பட்டதாக சொல்லப்படும் புகைப்படத்தில் எவ்வாறு இரு சக்கரவாகனம் தீ அணையாமல் எறிந்துகொண்டிருக்கிறது என்ற கேள்வியும், பார்வைமகசர் மற்றும் அத்தாட்சியில் சாட்சி கையொப்பம் செய்ததாக சொல்லப்படும் அ.சா.6 தான் ஒரு ஆவணத்தில் சம்பவயிடத்தில் வைத்தும் மற்றொரு ஆவணத்தில் காவல்நிலையத்தில் வைத்தும் சாட்சி கையொப்பம் செய்ததாக தனது முதல்விசாரணையில் சாட்சியம் அளித்திருப்பதும் இவ்வழக்கில் போலிசார் உண்மையாகவே சம்பவயிடத்திற்கு சென்று விசாரணை செய்தார்களா என்னும் கேள்வியை இந்நீதிமன்றத்திற்கு எழுப்பி இவ்வழக்கில் புலன் விசாரணை முறையாக மேற்கொள்ளப்பட்டதா என்னும் சந்தேகத்தினை இந்நீதிமன்றத்திற்கு ஏற்படுத்துகிறது.

18. இவ்வழக்கில் புகாரை 24.09.2022ம் தேதி மாலை 18.30மணியளவில் சிறப்பு சார்பு

ANTONY RISHAN DEV Digitally signed by ANTONY RISHAN DEV Date: 2026.07.27 17:33:55 +0530

ஆய்வாளர் பாலுசாமி என்பவரிடம் கொடுக்கப்பட்டு அவரால் மனுரசீது வழங்கப்பட்டதாக சொல்லப்படும் நிலையில் அ.சா,ஆ.6 முதல்தகவல் அறிக்கையை பார்க்கையில் அதில் சம்பவத்தை குறித்த தகவலானது காவல்நிலையத்திற்கு 26.09.2022ம் தேதி 15மணிக்கு கிடைக்கபெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது. புகார் பெற்று மனு ரசீது வழங்கியதாக சொல்லப்படும் சிறப்பு சார்பு ஆய்வாளர் பாலுசாமியை விசாரித்து சாட்சியாக சேர்க்காததாலும் மனு ரசீது ஆவணத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்யாததாலும் புகார் உண்மையாகவே எப்போது புகார்தாரரால் காவல்நிலையத்தில் கொடுக்கப்பட்டது என்னும் சந்தேகத்தினை ஏற்படுத்தி அரசுதரப்பு வழக்கிற்கு மிகவும் பாதகமாக அமைந்துள்ளது.

19. மேலும் இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, சாட்சிகளை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்து, புலன் விசாரணை முடித்து 1 முதல் 4 எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த விவரம் குறித்து புலன் விசாரணை அதிகாரியான அ.சா.8 சாட்சியம் அளித்துள்ள நிலையிலும் இவ்வழக்கில் புகாரில் சொல்லப்படாத சங்கதிகளை மிகைப்படுத்தி புகார்தாரர் சாட்சியத்தில் தெரிவித்துள்ளாரா என்னும் சந்தேகம் நீதிமன்றத்திற்கு ஏற்படுவதாலும் வழக்கின் முக்கிய சாட்சிகள் அனைவரும் புகார்தாரரின் நெருங்கிய உறவினர்களாக இருப்பதாலும் அவர்களின் சாட்சியம் ஒருவருக்கொருவர் முரண்பட்டு அமைந்திருப்பதாலும் இவ்வழக்கில் சேர்க்கவேண்டிய ஆவணங்களையும் சாட்சிகளையும் புலன் விசாரணை அதிகாரி சேர்க்காததாலும் இவ்வழக்கில் புலன் விசாரணை முறையாக மேற்கொள்ளப்படாததாலும் 1 முதல் 4 எதிரிகளின் குற்றச்செயல்களை அரசு தரப்பு சாட்சிகளின் வாயிலாக ஐயத்திற்கு இடமின்றி நிரூபிக்கவில்லை என்பதாக கண்டு அரசு தரப்பில் சொல்லப்பட்டது போல மேற்படி குற்றச்சம்பவம் நடைபெற்றதா என எழும் சந்தேகத்தின் பலனை மேற்படி 1 முதல் 4 எதிரிகளுக்கு சாதகமாக்கிட இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

20. எனவே இறுதியாக 1 முதல் 4 எதிரிகள் இ.த.ச பிரிவுகள் 341, 294(b), 506(ii), 435 கீழ் குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து, மேற்படி பிரிவுகளிலிருந்து 1 முதல் 4 எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. 1,2,3,4 எதிரிகள் எழுதிக் கொடுத்த பிணையமுறி ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது

21. இவ்வழக்கில் சொத்துக்கள் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை.

ANTONY RISHAN DEV
Digitally signed by ANTONY RISHAN DEV
Date: 2026.07.27 17:34:00 +0530

இத்தீர்ப்புரை என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்ல அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் நேரடியாக அதை கணினியில் வைத்து சரிபார்க்கப்பட்ட பின்னர் 2026ம் ஆண்டு ஜீலை மாதம் 27-ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

ANTONY RISHAN DEV Digitally signed by ANTONY RISHAN DEV Date: 2026.07.27 17:34:04 +0530

நீதித்துறை நடுவர்,
திருவாடானை.

<u>அரசு தரப்பு சாட்சிகள் :-</u>

| | | | |
|---|---|---|---|
| 1. | அ.சா.1 | திரு.பிரபாகரன் | புகார்தாரர் |
| 2. | அ.சா.2 | திரு.சேகர் | கண்ணுற்ற சாட்சி |
| 3. | அ.சா.3 | திரு.அருள்சாமி | கண்ணுற்ற சாட்சி |
| 4. | அ.சா.4 | திரு. ஜோசப்மாரி | கண்ணுற்ற சாட்சி |
| 5. | அ.சா.5 | திரு.அந்தோணிசாமி | செவிவழி கேட்டறிந்த சாட்சி |
| 6. | அ.சா.6 | திரு.சத்தியமூர்த்தி | அத்தாட்சி மற்றும் பார்வைமகசர் சாட்சி |
| 7. | அ.சா.7 | திரு. சுரேஷ் | அத்தாட்சி மற்றும் பார்வைமகசர் சாட்சி |
| 8. | அ.சா.8 | திரு. பாஸ்கரன் | விசாரணை அதிகாரி |

<u>அரசு தரப்பு சான்றாவணங்கள் :-</u>

| | | | |
|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | 24.09.2022 | புகார் மனு |
| 2. | அ.சா.ஆ.2 | 26.09.2022 | அத்தாட்சியில் உள்ள அ.சா.6 ன் சாட்சி கையொப்பம் |
| 3. | அ.சா.ஆ.3 | 26.09.2022 | பார்வைமகசரில் உள்ள அ.சா.6 ன் சாட்சி கையொப்பம் |
| 4. | அ.சா.ஆ.4 | 26.09.2022 | அத்தாட்சியில் உள்ள அ.சா.7 ன் சாட்சி கையொப்பம் |
| 5. | அ.சா.ஆ.5 | 26.09.2022 | பார்வைமகசரில் உள்ள அ.சா.7 ன் சாட்சி கையொப்பம் |
| 6. | அ.சா.ஆ.6 | 26.09.2022 | முதல் தகவல் அறிக்கை |
| 7. | அ.சா.ஆ.7 | 26.09.2022 | பார்வை மகஜர் |
| 8. | அ.சா.ஆ.8 | 26.09.2022 | மாதிரி வரைபடம் |
| 9. | அ.சா.ஆ.9 | 26.09.2022 | அத்தாட்சி |
| 10 | அ.சா.ஆ.10 | 26.09.2022 | சேதமதிப்பு சான்று |
| 11. | அ.சா.ஆ.11 | 26.09.2022 | இருசக்கரவாகனத்தின் புகைப்படம் |

<u>அரசு தரப்பு சான்று பொருட்கள் :- </u> --இல்லை--

1,2,3,4 எதிரிகள் தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள் சான்று பொருட்கள் :-

--இல்லை--

ANTONY RISHAN DEV
Digitally signed by ANTONY RISHAN DEV
Date: 2026.07.27 17:34:11 +0530

நீதித்துறை நடுவர்,
திருவாடானை.

குறிப்பு :-

1. வழக்கின் முடிவு குறித்து காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
2. வழக்கு விசாரணையின் போது 1,2,3,4 எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.
3. எந்த ஒரு சாட்சியும் 3 முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.